## செப்டம்பர் - 24

**"நான் தானே ஆகாதவனைய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்."**

**- 1கொரி 9 : 27.**

செத்ததாக எண்ணப்பட்டிருக்கிற நிலைமையிலிருந்து எழும்ப சரீரத்திற்கு மாம்சத்திற்கு ஒரு சுபாவம் உண்டு. ஆகையால், புது சுபாவத்திற்குத் தன்னுடைய ஆட்சியை நிர்வகிக்கவும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவும் ஜெயங்கொண்டவனாக பந்தயப் பொருள் பெறவும் தொடர்ந்து விழிப்புடன் இருப்பது அவசியமாயிருக்கிறாது. விழுந்துப்போன சுபாவத்துக்குரிய பாவங்களுக்கும், பலவீனங்களுக்கும் எதிராக நடக்கிற போராட்டங்கள் என்ற அர்த்தத்தில் மாம்சத்துக்கு எதிராக நடக்கிற இந்த புது மனதின் போர்களே நல்ல போராட்டமாக இருக்கிறது. "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிற பிரகாரமாக கிறிஸ்தவனின் முழு ஓட்டமும் ஒரு விசுவாசத்தின் ஓட்டமாக இருக்கிறது என்ற அர்த்தத்தில் அவைகள் விசுவாசத்தின் ஒரு போராட்டமாயிருக்கிறது. வாக்குதத்தங்களிலும், சகாயரான கர்த்தரிலும் விசுவாசத்தை அப்பியாசித்தாலன்றி, தன்னுடைய சொந்த மாம்சத்துக்கும் அதன் இயற்கை குணத்துக்கும், ஆசைகளுக்கும் விரோதமாக நடக்கிற இந்தப் போரை ஒருவரும் தொடர்ந்து செய்ய முடியாது என்ற அர்த்தத்தில் இது ஒரு விசுவாசத்தின் போராயிருக்கிறது.

**- Z ’03, 425 (R 3272)**

சரீரத்தை ஒடுக்குகிறதற்கும் அதைக் கீழ்ப்படுத்துகிறதற்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது. நம்மை கட்டுப்படுத்த எடுக்கப்படுகிற சரீரத்தின் முயற்சிகளை நாம் அடக்கும் போதும் நம்முடைய பூமிக்குரிய பற்றுதல்களை அதன் பொருள்களிலிருந்து பிரிக்கும்போதும் அதன் தாக்குதல்களால் ஊடுருவக் கூடாதவர்கள் என்று நிரூபிக்கும் போதும், சரீரத்தை நாம் ஒடுக்குகிறோம். புது இருதயமும், மனதும், சித்தமும், சரீரத்தைப் பற்றிக்கொண்டு தேவனுடைய சித்தத்திற்கு அதை அடிமையாக்கி சத்தியத்திற்கும், நீதிக்கும், பரிசுத்தத்திற்கும், உழைக்க அதை கட்டாயப்படுத்தும் போது, நாம் அதைக் கீழ்ப்படுத்துகிறோம். அழைப்பின் பந்தையப்பொருளை அடைய இந்த இரண்டு காரியங்களையும் நாம் செய்ய வேண்டும். நித்திய ஜீவனை அடையமற்ற காரியங்களும் செய்யப்படும்பொழுது இந்தக் காரியங்கள் ஜெயங்கொள்ளுவதற்கு மிகவும் அவசியமானவை. இதில் தவறிப்போகிற எவரும் ஜெயங்கொள்ளுகிறதில்லை பந்தயப்பொருள் சம்பந்தமாக அவன் ஆகாதவனாய் போய்விடுவான்.

**- P ’36, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 9:25,26; 2கொரி 6:4,5; ரோம 8:13; அப் 1:25; 2பேது 2:15; எபே 4:22; கொலோ 3:5; எரே 6:30; லூக் 9:25; 2கொரி 13:5,6.

**கோபுர வாசிப்பு** : Z ’15, 296 (R 5777).

**வினாக்கள்** : எனது இவ்வார அனுபவங்கள் இதற்கு எவ்வாறு ஒத்திருந்தன? அதில் அனுகூலமாக பிரதிகூலமாக இருந்தவை எவை? பலன் என்ன?